

தமிழீழத்தின் அடிக்கல் 14

# லெப். கேணல் குமரப்பா



லெப். கேணல் குமரப்பா

1983ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்ட குமரப்பா அவர்கள் பின்னாளில், மட்டக்களப்பு மாவட்டத் தளபதியாகவும், யாழ் மாவட்டத் தளபதியாகவும் விளங்கினார்.

## இவர் பங்கேற்ற குறிப்பிடக்கூடிய தாக்குதல்கள்:-

* பொலிகண்டியில் கடல் வழிமூலம் தரையிறங்க முற்பட்ட சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதல் (05-08-1984)

* பருத்தித்துறை பொலீஸ் நிலையத் தாக்குதல்.(10-04-1984)

* கொக்கிளாய் சிறீலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதல்.(14-02-1985)

* யாழ். பொலீஸ் நிலையத்தாக்குதல் (10-04-1985)

* மன்னார் பொலீஸ் நிலையத்தாக்குதல் (10-05-1985)

* குச்சவெளி பொலீஸ் நிலையத்தாக்குதல் (01-06-1985)

* வாகரையில் சிறீலங்கா இராணுவத்தின் மீதான தாக்குதல் (18-08-1985)

* ஏறாவூர் பொலீஸ் நிலையத்தாக்குதல் (02-09-1985)

* மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதல்.

# நன்னம்பிக்கை முனையாய் நின்ற பன்னிரு வேங்கைகள்....

தமிழீழ மக்களின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்விற்கோர் தலைவிதி வரைய முற்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தையும், அதன் தார தம்மியத்தையும் ஆற அமர எடைபோட முற்படுவோர்க்கெல்லாம் தற்போது கால அவகாசம் வந்து வாய்த்திருக்கிறது. மேற்படி ஒப்பந்தத்தில் சிறீலங்கா அரசு இதயசுத்தியுடன் கையொப்பமிட்டிருக்குமானால் இப்பொழுது எதற்காக ஓர் புதிய தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். என்ற கேள்வி கேட்பாரின்றியே காற்றில் கிடக்கிறது. இத்தகைய கேள்விகளையும்; அதற்கான பதிலையும் தம் ஈகத்தால் எழுதிவைத்தவர் பலர். அவர்களில் மிக முக்கியமானவர்கள் தளபதிகள் குமரப்பா, புலேந்திரனுடன் பன்னிரு வேங்கைகளுமாவர். தமிழீழப் போர் என்பது சிறீலங்கா, தமிழீழம் என்ற இரு பக்கங்களை மட்டும் கொண்டதல்ல; சிறீலங்கா, இந்தியா, தமிழீழம் முக்கோண அச்சைக் கொண்டதென்ற உண்மையை உலகின்முன் அரங்கப்படுத்த தீருவில் தீயானவர்களும் இவர்களே.

இலங்கைத் தீவின் சுதந்திரம் வெளிப்படையானதல்ல; சுதந்திர சாசனத்தில் கையொப்பமிடும்போதே அதில் பல தவறுகள் திட்டமிட்டபடி நிகழ்த்தப்பட்டிருந்தன. அந்தத் தவறுகளின் மீது மோதிய எதிர்விசையே தமிழீழப் போர். இந்தப் போர் பயணத்தில் பன்னிரு வேங்கைகளின் தியாகமே சடுதியான மாற்றத்தை ஏற்படுத்திய புள்ளியாகும். 15- ம் நூற்றாண்டில் ஆபிரிக்கக் கடல் வழியாக இந்தியாவிற்கு வழி தேடிய ஐரோப்பிய மாலுமிகள் தென்னாபிரிக்க முனையைக் கடக்க முயன்றபோது கடும் புயலினால் தாக்குண்டதும், அதற்கு 'புயல் முனை' யெனப் பெயர் சூட்டினர். இதை மறுதலித்து புயலைக் கடப்போரே சீரான வழியைக் காண்போரெனக்கூறி, அதற்கு மறுபடியும் 'நன்னம்பிக்கை' முனை என்று பெயரிட்டு, இந்தியாவைக் கண்டுபிடிக்க வழியமைத்தவன் ஸ்பானிய அரசனான 3- ம் ஜோன். இந்தப் புயல் கடந்த பயணமே இன்றைய விஞ்ஞான உலகின் வரவிற்கு வழியமைத்து என்பது அனைவரும் அறிந்த வரலாறு. இதுபோலவே தமிழீழப் போர் பாதையிலும் முதலில் புயல் முனையாகவும் பின் நன்னம்பிக்கை முனையாகவும் வழிகாட்டியவர்கள் பன்னிரு வேங்கைகளாவர். இவர்களின் தியாகத்தின்பின் இந்தியப் படைகளுடன் ஏற்பட்ட பயங்கர மோதலை, கடக்க முடியாத புயலென வர்ணித்தவர் பலர். ஆனால் தமிழீழத்திலிருந்து இந்தியப்படை அகன்ற பின்னர், அந்தப் போர் கடந்தது புயல்முனையல்ல பல வெற்றிகளுக்கு ஆதாரமாக அமையப்போகும் நன்னம்பிக்கை முனையென எல்லாராலுமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படியே தமிழீழப் போரும் நம்பமுடியாத வெற்றிகளையெல்லாம் நிகழ்த்தியவண்ணம் சென்றது. அத்தகைய சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலுமே தமிழீழம் தன் தொப்பியைக் கழற்றி மரியாதை செலுத்தக் கடப்பாடுடையோராக உயர்வு பெற்று நின்றவர்கள் பன்னிரு வேங்கைகளுமாவர். ஏனெனில், போராட்டக் களத்தில் இந்தியப் படைகளுடனான மோதலைத்தாண்டியதானது. புலிகள் அணி இனிவரும் எத்தடைகளையும் தாண்டவல்லது என்ற உண்மையை நிருபிப்பதாயிருந்தது. அந்தப் பெருமைக்குள் மறைந்து நிற்கும் நாயகர்களே பன்னிரு வேங்கைகள்.

தமிழரின் தாயக பூமியான வடக்கையும், கிழக்கையும் இணைப்பதை இன்றும் கூட அரசதரப்பினர் ஒப்புக்கொண்டதாகவில்லை. இந்திய- இலங்கை ஒப்பந்தம் வடக்குக்கிழக்கு இணைவற்ற ஓர் தீர்வைத் திணித்தபோது, குமரப்பாவும், புலேந்திரனும் ஓர் எழுதப்படாத ஒப்பந்தத்தின் மூலம் அதை நிராகரித்திருந்தனர். இந்த மகத்தான உண்மையை இன்றும் கூட பலர் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. மரணமடைந்த போது குமரப்பா யாழ் மாவட்டத்தின் தளபதியாகவும், புலேந்திரன் திருமலை மாவட்டத்தளபதியாகவும் இருந்தனர். இவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து நிகழ்த்திய மரணத்தின் பொருள், வடக்கும் கிழக்கும் மரணத்திலும் பிரிக்கமுடியாது கைகோர்த்து நிற்பதையே உணர்த்துவதாயிருந்தது. தமிழர்களின் ஒன்றிணைந்த தாயகக் கோட்பாட்டை வெளிப்படுத்த மனித சக்தியில் இதற்கு மேல் ஓர் உயர்ந்த எல்லையை தேடிவிட முடியாது. ஏனெனில் மரணமடையும்போது தளபதி குமரப்பா திருமணமாகி ஒருமாத காலமே ஆகியிருந்தது. தோளில் போட்ட மாலைகூட வாடிப்போகாத வேளையில் அவர் அந்த எட்டமுடியாத தியாகத்தைப் புரிந்திருந்தார். அவரைப் போலவே தளபதி புலேந்திரனும் மணமுடித்து இரண்டு மாதகாலமே நிறைவுபெற்ற மணமகன்தான். இத்தகைய இக்கட்டான சூழலில் மானிடத்தின் மீது சவால் விடும் பின்னணியில் நின்று இவ் விரு இளைய உள்ளங்களும் புரிந்த தியாகமும், வடக்கையும் கிழக்கையும் இணைத்துக்காட்டிய விதமும் சாதாரண தியாகங்களல்ல. மணமாலை வாடுமுன்னர் போரில் மாண்ட புறநானூற்றுக்காலப் பூதப் பாண்டியன் புகழை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் காத்திருந்து தகர்த்து விட்ட வரலாற்றின் குறியீடுகள் இவர்கள்.

தளபதிகள் குமரப்பா, புலேந்திரனும் பதினைந்து போராளிகளும் 03.10.87 அன்று கடலில் கைதானார்கள். ஒப்பந்தத்திற்கு முரணாக கொழும்பிற்கு எடுத்துச்செல்லப்படவிருந்த வேளையில் 05.10.87 அன்று சயனைட் அருந்தி பன்னிரு வேங்கைகள் மரணமடைந்தார்கள். கைது செய்யப்பட்டபோது அவர்கள் தப்பிச்செல்ல வேண்டிய தேவை இருந்திருக்கவில்லை, காரணம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அவர்கள் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட போராளிகளே. எனினும் அவர்கள் கைதின் பின்னர், தலைவர் பிரபாகரன் அவர்கள் 'தமிழீழ மக்களின் பிரதிநிகளாக இந்தியா எம்மை அங்கீகரித்தது. ஆகவே சிறீலங்கா அரசு எம்மைக் கைதுசெய்யும் பட்சத்தில் இந்தியாவே எம்மைப் பாதுகாக்கவேண்டிய கடமைப்பாட்டிற்குரியது' என்று சுட்டிக் காட்டி இருந்தார். ஆனால் அவ்வேண்டுகோள் இந்திய-இலங்கை

2004

அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் இறுக்கமான நிலையையே கடைப்பிடித்தனர். எனினும் கடலில் ஏற்பட்ட இந்த அனுபவமும், உரிமை நிராகரிப்பும்கூட ஓர் புதிய வரலாற்றுத் தேவையை ஏற்படுத்திவைத்தன. அதன் பொருட்டு உருவாக்கப்பட்டதே கடற்புலிகள் அணியாகும். அன்று அவர்களுக்கு வழங்க மறுக்கப்பட்ட கடற் பாதுகாப்பை ஓர் குறுங்காலத்திலேயே புலிகள் ஏற்படுத்திக்கொண்டனர். இன்று கடற்புலிகள் பெற்றுள்ள அபார வளர்ச்சி, சோழ சாம்ராச்சியத்திற்குப் பின்னர், தமிழன் பெற்ற பேரெழுச்சியாகும். இந்த வளர்ச்சிக்குப் பின்னாலும் நிழல் போலத் தெரிவது பன்னிருவேங்கைகளினதும் தியாகமுகங்களே.

மேலும், தமிழீழ அரசு பற்றிய அங்கீகாரமும் இக்காலத்தில்தான் தெளிவாக வரையறைசெய்யப்படுகிறது. அரசு என்றால் என்ன என்பதற்கு நீண்ட காலமாக எண்ணற்ற அறிஞர்கள் தோன்றி தமது வரைவிலக்கணங்களைக் கூறிக்கொண்டார்கள். அதுபோல தமிழீழ அரசுக்கும் ஓர் எல்லை வகுத்துத் தந்தவை இந்திய இலங்கை அரசுகளே. உண்மையாகவே இலங்கை ஒற்றைத் தேசியமுள்ள நாடக இருந்தால் இந்திய இராணுவம் தீவு முழுவதும் நிறுத்தப்பட்டிருக்க வேண்டியது அவசியம். ஆனால் அவர்கள் இலங்கையின் வடக்கு,கிழக்குப் பிராந்தியங்களிலேயே முகாமிட்டிருந்தார்கள். அவர்களது பணி மலையகம் தவிர்ந்த தமிழீழத்தேசியம் நிலவும் பகுதிகளுக்குள்ளேயே அங்கிகரிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் இலங்கை பல்லினத் தேசியமுள்ள நாடென்பதை அவர்கள் தெளிவாகவே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுடனான போரில் இந்திய இராணுவம் நகர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிறம் தீட்டினால், அதுவும், இன்றைய தமிழீழத் தேசத்திற்குரிய வரைபடமும் ஒன்றாக இருக்கும் அதிசயத்தைக் காணமுடியும். ஆகவேதான் போருக்கான அணிவகுத்து நின்ற இந்திய இராணுவம் தன்னை அறியாமலே தமிழீழத்திற்குரிய வரைபடத்தையும் வரைந்து சென்றுள்ளதெனலாம்.

மேலும் சோவியத் யூனியனின் குலைவுடன் ஒற்றைத் தேசியக்கோட்பாடும் உலகளாவிய ரீதியில் சுரத்திழந்துவிட்டது அல்லாமலும் தமக்குள் இணையும் நாடுகளின் ஒன்றியங்கள் யாவுமே பல்தேசிய அடையாளங்களை அங்கீகரித்த பின்பே இணைவுபடுகின்றன. இலங்கைதீவில் இவ்வளவு இழப்புக்களும், பொருளாதாரப் பின்னடைவுகளும், நெடிய போரும் நிலவும் சூழலில் இரட்டைத் தேசியம்கூட ஏற்கப்படாதிருப்பது கூர்ந்து நோக்கற்குரியது.

இருந்தபோதும் தம்மீது நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு சிதைவுகளின் போதும் ஈழத் தமிழ் மக்கள் ஓர் இலட்சியத்திற்காகவே உறுதியுடன் அணிதிரள்கின்றனர். வடமராட்சி மீதான தாக்குதல் நடைபெற, கரும்புலிகள் தாக்குதல் அறிமுகமாக வேண்டியிருந்தது. ஐந்தம்சக் கோரிக்கைக்காக திலீபன் ஈகம் புரியவேண்டியிருந்தது. அதிகாரமற்ற இடைக்கால அரசுக்கான பேரம் பேசலில் பன்னிரு வேங்கைகளின் தியாகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அமைதி ஒப்பந்தம் முறிவடைய போர் தொடங்கியது. முதற் பெண்புலி 2வது லெப்டினன்ட் மாலதியின் தியாகம் நடைபெற அதன்வழி எண்ணற்ற நட்சத்திரங்களாலும், அவற்றை மறைக்க வந்த மேகங்களாலும், இடிமுழக்கங்களாலும் தமிழீழப் போர்வானம் நிறைந்துபோய் பல ஆண்டுகள் கடந்துவிட்டன. மாவீர நட்சத்திரங்கள் நிறைந்து போயுள்ள வானத்தின் கீழ் நின்று சகல சோகங்களையும் சுமந்தபடி தமிழீழ மக்கள் களைப்பின்றிக் காத்திருப்பதும் மாவீரர் நேசித்த சுதந்திரத்திற்காகத்தான். "மனிதன் மனிதன்தான் அதற்கு மேல் எவ்வளவு நாள் நீடிக்கும் அவனது வேட்டை !" என்பது பிரான்சிய நாட்டின் தேசிய கீதத்தின் சில வரிகள். இதுவே மனிதனால் மேற்கொள்ளக்கூடிய ஆக்கிரமிப்பு எண்ணத்திற்கு வரையப்படும் கடைசி எல்லைக்கோடாகும். பன்னிரு வேங்கைகளின் பின் முடிந்து விட்ட ஆண்டுகளை எடைபோட்டால், குண்டு வீச்சு, உணவுத்தடை, உலகால் துண்டிக்கப்பட்ட தனிமை யாவுமே தமிழீழ மக்கள் இனிமேல் சந்திப்பதற்கு பெரிதாக எதுவுமில்லை. என்ற நிலையை உருவாக்கிவிட்டது. எனினும் அவர்கள் கடந்து கொண்டிருப்பது புயல் முனையை அல்ல நன்னம்பிக்கை முனையையே என்பதை வரலாறு நிச்சயமாக எழுதவேண்டி இருக்கும். ஏனெனில், குமரப்பா புலேந்திரனுடன் பன்னிரு வேங்கைகளின் காலத்திலேயே அவர்கள் புயலைக் கடந்து போகப் பயிற்சி பெற்ற இனமாகி விட்டனர்.

நன்றி: எரிமலை ஒக்ரோபர் 1997.

---

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னால் இந்திய சிறீலங்கா அரசுகள் அதை மீறும் வகையில் நடந்து கொண்ட போது. அந்நிலை குறித்து தலைவருக்கு எழுதிய இறுதிக்கடிதம்.

## லெப். கேணல் புலேந்திரனின் கடிதம்

*கனம் தலைவர் அவர்கட்கு,*

*புலேந்திரன் ஆகிய நான் 3.10.87 அன்று அதிகாலை 4.30 மணியளவில் சிறீலங்கா கடற்படையினரால், பருத்தித்துறை கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டேன். எம்மீது எவ்வித குற்றமும் காணப்படாமல் இருந்தும் கூட என்னைக் காங்கேசன்துறை இராணுவமுகாமிற்கு அழைத்துச் சென்று ஓர் சிறைக்கைதிபோல் நடத்தப்பட்டேன். பின்னர் அங்கிருந்து பலாலி இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு இராணுவத்தினரின் பலத்த காவலுக்கிடையில் இந்திய அமைதிப்படையினரின் மேற்பார்வையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன். மேலும் என்னை சிறீலங்கா இராணுவத்தினர் விசாரணை என்ற பெயரில் அல்லது வேறு ஏதாவது காரணத்தை முன்வைத்தோ கொழும்பிற்கு கொண்டு செல்ல நேரிடலாம். இக்கட்டத்தில் இலங்கை அரசின் சட்டதிட்டங்களுக்கோ, கட்டளைகளுக்கோ நான் எந்த நேரத்திலும் கட்டுப்படப் போவதில்லை. அச்சட்டதிட்டங்களை அங்கீகரிக்கவுமில்லை. இவற்றை மீறி என்னைக் கொழும்பிற்குக் கொண்டு செல்ல நேர்ந்தால் என்னையே நான் அழித்துக் கொள்ளத் தயங்கமாட்டேன், என ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

*இங்கனம்*
*புலேந்திரன்*
*(ஒப்பம்)*

*"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"*






மேஜர் அப்துல்லா



கப்டன் ரகு



கப்டன் நளன்




லெப்.தவக்குமார்



கப்டன் பழனி



லெப்.அன்பழகன்



பன்னிரு வேங்கைகளின்
நினைவு நாள்: 5
ஒக்ரோபர்



கப்டன் கரன்



2வது லெப்.
ஆனந்தகுமார்



2வது லெப்.
றெஜினோல்ட்



கப்டன் மிரேஷ்

## லெப்.கேணல் குமரப்பாவின் கடிதம்

கனம் தலைவர் அவர்களுக்கு,

குமரப்பா ஆகிய நான் 3.10.87 அன்று அதிகாலை 4.30 மணியளவில் சிறீலங்கா கடற்படையால் பருத்தித்துறை கடலுக்கு மேலாக வைத்துக் கைது செய்யப்பட்டேன். பின்பு காங்கேசன்துறை முகாமுக்கு கொண்டு வந்து, அங்கிருந்து பலாலி இராணுவ முகாமுக்கு இந்திய அமைதிப்படையினரின் கண்காணிப்பிலும், இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பிலும் இருக்கிறேன்.

மேலும் என்னைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல நேரிடலாம். நான் இலங்கை அரசாங்கத்தின் சட்டங்களை அங்கீகரிக்கவில்லை. என்னைக் கொழும்பு கொண்டு செல்ல நேரும் பட்சத்தில் என்னை முழுமையாக அழித்துக் கொள்ள சித்தமாயுள்ளேன்.

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

இங்ஙனம்
குமரப்பா
(ஒப்பம்)

